**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 261 / 2022**

Deposition of PW - 1 Petitioner / Respondent solemnly affirmed by P.Saraswathi, Bench Clerk Grade-II of this court on 24.06.2024 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **மூர்த்தி** | Age | : | 53 |
| Father's Name | : | **வெங்கிடுசாமி** | Village | : | **வீரராக்கியம்** |
| Calling | : | | Taluk | : | **கிருஷ்ணராயபுரம்** |

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன். வழக்கு விபத்து சம்பந்தமான மாயனூர் காவல்நிலைய குற்ற எண்.17/2022 ல் பதிவு செய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கை இணையதள பதிவிறக்க நகல் - **ம.சா.ஆ.1**. குற்ற இறுதியறிக்கை இணையதள பதிவிறக்க நகல் - **ம.சா.ஆ.2**. TN 68 T 5784 என்ற எண்ணுடைய இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை இணையதள பதிவிறக்க நகல் - **ம.சா.ஆ.3**. ராஜ் ஆர்த்தோ மருத்துவமனை எனக்கு வழங்கிய காயச்சான்று இணையதள பதிவிறக்க நகல் - **ம.சா.ஆ.4**. என்னுடைய அடையாளம் மற்றும் முகவரியைக் காட்டக்கூடிய ஆதார் அடையாள அட்டை நகல் - **ம.சா.ஆ 5**. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த சாலையானது தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். அந்த சாலையானது நேரான சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த நேரமானது இரவு 8.00 மணி ஆகும். எதிரே வந்த Hero Honda splender வாகனத்தின் முகப்பு விளக்கு எரிந்ததா என்றால் இல்லை. விபத்து நடந்த இடத்தில் வெளிச்சம் இல்லை. விபத்தானது மெடிக்கல் முன்பாக

நடந்தது. நான் தான் இருச்சக்கர வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையை குறுக்காக கடந்து விபத்தை வரவழைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவு, அஜாக்கிரதை மட்டுமே காரணம் என்றாலும், இருச்சக்கர வாகனத்தை ஓட்டி வந்த 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவோ, அஜாக்கிரதையோ காரணம் இல்லை என்றாலும் சரியல்ல. இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய நபருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும், 1ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிபந்தனைகளை மீறியுள்ளார் என்பதாலும், 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏதேனும் இழப்பீடு கிடைக்க வேண்டும் என்றால் அதை 1ம் எதிர்மனுதாரர் தான் செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனக்கு விபத்தால் ஏற்பட்ட காயங்கள் முழுமையாக குணமாகிவிட்டது என்றாலும், அந்த காயங்களால் எனக்கு எவ்வித ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவ செலவாக ரூ.2 லட்சம் செவழித்தேன் என வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டதாக சொல்லும் மருத்துவ செலவிற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்யாததில் இருந்தே எனக்கு மருத்துவ செலவு எதுவும் ஏற்படவில்லை என தெரியவருகிறது என்றால் சரியல்ல. 2 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.

(ஓம்.சி.சொர்ணகுமார்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.